
இறைத்தூதன்
கத்தோலிக்க வார இதழ்

**அமெரிக்க நாடுகள் நிறுவனத்தில் திருப்பீடத்தின் நிரந்தரப் பார்வையாளராகப் பணியாற்றும் பேராயர் Juan Antonio Cruz Serrano அவர்கள், நவீன அடிமைத்தனத்தின் கொடுமையை அழித்தொழிக்கும் ஒன்றிணைந்த முயற்சிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.**

# நவீன அடிமைத்தனத்தை எதிர்த்துப் போராட திருப்பீடம் அழைப்பு!


நவீன அடிமைத்தனம் (Siam Pukkato)

அடிமைத்தனம் என்பது கடந்த காலத்தில் இடம்பெற்ற ஒரு நிகழ்வு மட்டுமல்ல, மாறாக அது இன்றும் தொடர்கிறது என்று கூறினார் அமெரிக்க நாடுகள் நிறுவனத்தில் திருப்பீடத்தின் நிரந்தரப் பார்வையாளராகப் பணியாற்றும் பேராயர் Juan Antonio Cruz Serrano.

மார்ச் 25, இச்செவ்வாயன்று, OAS எனப்படும் அமெரிக்க நாடுகள் நிறுவனத்தில் இடம்பெற்ற, அடிமைத்தனம் மற்றும் அட்லாண்டிக் கடல் கடந்த அடிமை வர்த்தகத்தால் பாதிக்கப்பட்டவர்களின் அனைத்துலக நினைவு தினத்தில் உரையாற்றியபோது இவ்வாறு தெரிவித்தார் பேராயர் Cruz Serrano.

நவீன அடிமைத்தன வடிவங்களை தீவிரமாக எதிர்த்துப் போராடும் அதேவேளையில், அடிமைத்தனத்தின் வரலாற்றை நினைவில் வைத்துக் கொள்ளுமாறும் அதன் உறுப்பினர்களிடம் வலியுறுத்தினார் பேராயர் Cruz Serrano.

அடிமைத்தனம் தனிநபர்களை மனிதாபிமானமற்றதாக்குகிறது என்ற திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் கருத்தை பிரதிபலிக்கும் வகையில், மனித வர்த்தகத்தை முடிவுக்குக் கொண்டுவருவதற்கான தொடர்ச்சியான விழிப்புணர்வு மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகளின் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார் பேராயர் Cruz Serrano.

அமைதியான நல்லிணக்கத்தை வளர்க்கும் மற்றும் மனித மாண்பிற்கு முன்னுரிமை அளிக்கும் செயல்முறைகளுக்கு அழைப்புவிடுத்த பேராயர் Cruz Serrano அவர்கள், மனித வர்த்தகத்தால் பாதிக்கப்பட்டவர்கள் உட்பட, ஓரங்கட்டப்பட்டவர்களுக்கு கல்வி மற்றும் ஆதரவளிப்பதில், மிகவும் நீதியான மற்றும் இரக்கமுள்ள சமூகத்தை உருவாக்குவதற்கான திருத்தந்தையின் உறுதிப்பாட்டையும் தனது உரையில் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

செல்வராஜ் சூசைமாணிக்கம் - வத்திக்கான்

# மறைபோதக உருவாக்கப் பயிற்சி



மறைமாவட்டக் கல்வி குழுவின் ஏற்பாட்டில் மாவட்ட அளவிலான மறைபோதகர்களுக்கான உருவாக்கப் பயிற்சி கடந்த 18.3.2025 அன்று புனித யூதா ததேயு, ரவாங் பங்கில் நடைபெற்றது. இப்பயிற்சி தமிழ் மற்றும் மலாய் ஆகிய இரு மொழிகளில் நடத்தப்பட்டது. காலை 9.00 மணி முதல் மாலை 4.00 மணி வரை நடைபெற்ற இப்பயிற்சி மறைபோதகர்களுக்கு ஓர் அடிப்படை பயிற்சியாக அமைந்தது. இதில் ரவாங், பத்து ஆராங், பெஸ்தாரி ஜெயா, கோல குபு பாரு ஆகிய பங்குகளில் இருந்து சுமார் 40க்கும் மேற்பட்டோர் பங்கெடுத்தனர்.

இப்பயிற்சி இந்நவீன காலத்தில் மறைபோதகர்கள் எதிர்நோக்கும் சவால்கள், அவற்றை எவ்வாறு எதிர்கொள்வது போன்ற தலைப்புகளில் கலந்துரையாடல்கள் நடைபெற்றன. மேலும் இன்றைய இளைஞர்கள் மற்றும் சிறுவர்களுக்கு எவ்வாறு இறைவனைப் பற்றி போதிப்பது என்றும் பகிரப்பட்டது. அதுமட்டுமல்லாமல் மறைபோதகர்களுக்கு மாற்கு 4:3-8 வசனங்களும் வெளிப்படுத்தப்பட்டது.

மறைபோதகம் என்பது ஒரு பொது குருத்துவம். இது இறைவனின் அழைப்பு. இந்த அழைப்பானது மறைபோதக வகுப்போடு முடிவடைவதில்லை. மாறாக திருஅவையில் இயங்கும் அனைத்து பணிக்குழுக்களுடன் இணைந்து பணி செய்ய வேண்டும். லெக்சியோ டிவினா (LECTIO DIVINA) மற்றும் சுய ஆய்வு செபத்தை எப்படி செய்வது என்பது ஓர் அனுபவமாகும். மேலும் இந்த முதலாம் பயிற்சியில் மறைபோதகர்களின் அழைப்பு, பணி மற்றும் செயல்முறை என இம்மூன்று தலைப்புகளில் அருட்சகோதரி ரீட்டா சவரியண்ணன் (FDCC) மற்றும் அவரது குழுவினரால் கலந்துரையாடல் நடைபெற்றது. மறைபோதகத்தின் ஆழமான மகத்துவத்தைக் குழு பகிர்வு மூலம் அறியப்பட்டது. இப்பயிற்சி இறை ஆசீருடன் இனிதே முடிவுற்றது.

# Gunung Pulai மலையிலும் நீர்வீழ்ச்சியிலும் சிலுவை பாதை

மார்ச் 5ஆம் திகதி 2025 (சனிக்கிழமை) காலை 7 மணிக்கு, கிறிஸ்து ராஜா தேவாலயம், கூலாய் (CTK) தமிழ் இளைஞர் மேய்ப்புபணிக்குழு ஏற்பாடு செய்த "இயேசுவுடன் பயணம்" எனும் நிகழ்ச்சி Gunung Pulai-யில், மறைதந்தை ஜேம்ஸ் ராஜேந்திரன் அவர்களின் ஆதரவுடன் வெற்றிகரமாக நடைபெற்றது. 4 முதல் 75 வயது வரை உள்ள மொத்தம் 42 பங்கு மக்கள் இதில் உற்சாகமாக பங்கேற்றனர்.

இந்நிகழ்ச்சியில் இரண்டு இடங்களில் சிலுவைப் பாதை வழிப்பாடு நடைபெற்றது. சிலர் நீர்வீழ்ச்சி பகுதியில் வழிப்பாட்டில் ஈடுபட்டனர். மற்றும் சிலர் மலையில் ஏறிக்கொண்டே சிலுவைப் பாதை வழிபாட்டில் கலந்து கொண்டனர். 600 மீட்டர் (1969 அடி) உயரமுள்ள மலை உச்சியை அடையும் இந்தப் பயணம், ஆன்மீக வளர்ச்சி மற்றும் உடற்திறன் சவால்களை ஒருங்கிணைத்தது. மலை ஏறும் போது ஏற்படும் கடினமான மற்றும் சிரமமான தருணங்களை எதிர்கொண்டபோதும், பங்கேற்பாளர்கள் இயேசுவின் துன்பத்தையும் தியாகத்தையும் நினைவுகூர்ந்தனர்.

இளைஞர்கள் முதல் முதியவர்கள் வரை, அனைவரும் இயேசுவின் அருளின் கீழ் ஒன்றிணைந்து, மறக்க முடியாத மற்றும் ஊக்கமளிக்கும் அனுபவமாக இந்த நாளை மாற்றினர். நிகழ்ச்சியின் முடிவில், பங்கேற்பாளர்கள் அனைவரும் புத்துணர்ச்சியுடன் வீடு திரும்பினர்.




**‘மலையில் சிலுவைப் பாதை வழிப்பாடு செய்வது எளிதான காரியம் அல்ல. ஆனால், பலர் உற்சாகமாக மலையேறுவதற்கு ஆவலாக இருக்கிறார்கள். இயற்கையின் மடியில், நிழலின் கீழ், முழு முயற்சியையும் செலுத்தி, இந்தப் பயணத்தை வெற்றிகரமாக முடிக்க முயற்சி செய்கிறோம். இது எளிதாக இருக்காது, ஆனால் நாம் அதை செய்து முடிக்க முடியும்.’**

**— மார்க் மரியதாஸ், 39, தமிழ் மேய்ப்புப் பணிக்குழு தலைவர்**

**‘நாங்கள் உச்சிக்கு வந்துவிட்டோம்! நான் இதை எதிர்பார்க்கவில்லை, ஆனால் செய்துவிட்டேன். அனைவரும் ஒன்றாக இருந்தால், நாம் எதையும் செய்ய முடியும். இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்த கிறிஸ்து ராஜா தேவாலய ஒருங்கிணைப்பாளர்களுக்குப் பெரும் நன்றி!’**

**— கேத்ரின், 41, CTK பங்கு மக்கள்**

**‘இந்த மலையேறும் நடவடிக்கை, கடவுளுடனும் இயற்கையுடனும் நேரம் செலவிட ஒரு சிறந்த செயல்பாடாக அமைந்தது. மனதிற்கு மிகுந்த நிறைவைத் தந்தது, என் கால் மற்றும் கை மட்டுமே வலிக்கிறது! வேறெதுவுமில்லை. மலையிறங்கும் போது, உருண்டோடியே இறங்கிவிடலாமோ? என்று தோன்றுகிறது.’**

**— நாதனியேல், 22, CTK பங்கு மக்கள்**

**‘பதிநான்கு நிலைகளைக் கொண்ட சிலுவைப் பாதை வழிப்பாட்டை முடித்துவிட்டேன். இது மிகவும் சிரமமானதாக இருந்தாலும், இது எல்லாம் இயேசுவுக்காக என்ற எண்ணம் மனதில் வந்தவுடன், அந்த வலி மறைந்துவிட்டது.’**

**— அஞ்சலினா பீட்டர், 19, CTK பங்கு மக்கள்**

**‘இந்த மலையின் உச்சியை அடைவது மிகவும் சாகசமும் சவாலாகவும் இருந்தது. சிலுவையைச் சுமந்து சென்ற இயேசுவின் துன்பத்தை முழுமையாக அனுபவிக்க முடியாவிடிலும், இந்த மலையேறுவதின் மூலம் ஒரு பங்காவது அனுபவிக்க முடிந்தது. இந்த ‘இயேசுவுடன் பயணம்‘ எனக்கு புதிய அனுபவத்தைத் தருகிறது, அதோடு மனதிற்கு மகிழ்ச்சியாக இருக்கிறது.’**

**— ஷாஸ்னி, 16, CTK பங்கு மக்கள்**

கி. கிறிஸ் ஜரின்
தமிழ் இளைஞர் மேய்ப்புபணிக்குழு

# கடவுளின் அன்பு நமக்கு மனம் திரும்புதல், மனமாற்றத்தின் அருளை வழங்கும் என பேராயர் பிசிகெல்லா உரை




மார்ச் 30, ஞாயிற்றுக்கிழமை உரோமில் உள்ள னய அந்திரேயா ஆலயத்தில் நடைபெற்ற இறைஇரக்கத்தின் மறைப்பணியாளர்களுக்கான சிறப்புத் திருப்பலியின்போது கடவுளின் அன்பு எவ்வளவு மகத்தானது என்பதை நாம் ஒவ்வொருவரும் கண்டறிய உதவும் வகையில் காணாமல்போன மகன் உவமையில் இயேசு வெளிப்படுத்தினார் என்றும், கடவுளின் அன்பு நம்முடைய அன்பிலிருந்து வித்தியாசமானது, மனம்திரும்புதல் மற்றும் மனமாற்றத்தின் அருளை நமக்கு வழங்குகின்றது என்று திருப்பீடத்துறையின் தலைவர், பேராயர் ரானோ பிசிகெல்லா கூறினார்.

அன்பு வாழ்வை மாற்றுகின்றது, மன்னிப்பு புதிய வாழ்க்கையை மீட்டெடுக்கின்றது என்றும், பகிர்தல் என்பது கடவுளால் நமக்குக் கொடுக்கப்பட்ட தாராள மனப்பான்மையின் பலன் என்றும் எடுத்துரைத்துள்ளார் பேராயர் ரானோ பிசிகெல்லா.

"மகனே, நீ எப்போதும் என்னுடன் இருக்கிறாய்; என்னுடையதெல்லாம் உன்னுடையதே" (லூக்கா:15:31) என்ற இறைவார்த்தையின் வழியாகக் கடவுள், நாம் எப்போதும் அவருடன் இருப்பவர்கள் என்பதை எடுத்துரைக்கின்றார் என்றும், அருள்பணியாளர்கள் ஒவ்வொருவரும் கடவுளுடனான தங்களது உடனிருப்பை உணர்ந்துகொள்ளாவிட்டால் நாம் செய்யும் செயல்கள் பலனளிக்காது என்றும் அருள்பணியாளர்கள் தங்களது பணிகளை வழக்கமானதாக, திரும்ப திரும்ப செய்யப்படும் ஒன்றாகக் கருதினால் அது பலனற்றதாக மாறிவிடும் என்று தெரிவித்த பேராயர் பிசிகெல்லா அவர்கள், னய மறைபொருள் வழியாக வெளிப்படும் கடவுளின் உடனிருப்பை நாம் எப்போதும் மற்றவர்களுக்குக் கொண்டு செல்பவர்களாக இருக்க வேண்டும் என்றும் பேராயர் பிசிகெல்லா கூறினார்.

தனது மகனுக்காகக் காத்திருந்த தந்தையைப் போல நாமும் தொலைவில் இருப்பவர்களின் தேவையை உடனடியாகப் புரிந்து கொள்பவர்களாக இருக்கவேண்டும் என்று சுட்டிக்காட்டிய பேராயர் அவர்கள், தொலைநோக்கு பார்வை, நம் எண்ணங்களிலும் செயல்களிலும் அடிக்கடி வெளிப்படும்போது நமது குறுகியப்பார்வை களையப்பட்டு, நமது இதயங்கள் அகலமாக்கப்படுகின்றன என்றும் தனது மகனைத் தொலைவில் கண்ட தந்தை விரைந்து அவனை எதிர்கொண்டு சென்றது போல அருள்பணியாளர்கள், பாவிகள் தங்களிடம் வரவேண்டும் என்று காத்திராமல் அவர்களை தேடிச்செல்ல வேண்டும் என்றும், தனது தந்தை, வீடு, குடும்பம் ஆகியவற்றை விட்டுவிட்டு தொலைனரம் சென்ற மகன், தனது வாழ்க்கை அர்த்தமற்றதாக இருப்பதை உணர்ந்து மீண்டும் இல்லம் திரும்பினான் என்று பேராயர் பிசிகெல்லா எடுத்துரைத்தார்.

தந்தையின் இறுக்கமான அணைப்புக்கு ஈடாக எந்த ஒரு மன்னிப்பிற்கான வார்த்தையும் தேவைப்படவில்லை என்று சுட்டிக்காட்டிய பேராயர் அவர்கள், மன்னிப்பு எதிர்காலத்தை நேரடியாகப் பார்க்கத் னண்டுகிறது, தகுதியான முறையில் வாழ உதவுகின்றது என்றும் எடுத்துரைத்தார்.

# பாஸ்கா கடத்தல் விருந்து : அடிமைத்தனத்திலிருந்து விடுதலையை நோக்கிய ஒரு பயணம்

கடந்த மார்ச் மாதம் 29ஆம் திகதி 2025 அன்று இரவு 8.00 மணிக்கு, ஜோகூர் கூலாய் பட்டணத்தில் அமைந்திருக்கும் கிறிஸ்து ராஜா தேவாலய தமிழ் மேய்ப்புப்பணிக்குழுயின் ஏற்பாட்டில் அப்பங்கில் உள்ள அதிச வட்டாரப் பொறுப்பாளர்களின் ஒத்துழைப்புடன் பாஸ்கா கடத்தல் விருந்து சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டது. இதில் 85க்கும் மேற்பட்ட பங்கு மக்கள் கலந்து கொண்டனர். இந்தக் கடத்தல் விருந்து ஓர் அர்த்தமுள்ள நிகழ்ச்சியாக அனைவருக்கும் அமைந்தது என கூறலாம்.

இக்கடத்தல் விருந்தின் வழியாக நாற்பது ஆண்டுகள் பாலைவனத்தில் பயணம் செய்த இஸ்ராயேல் மக்களின் வேதனைகள், துன்பங்கள், சவால்கள் மற்றும் இறைவன் அவர்களுக்குக் கொடுத்த நன்மைகள் என அனைத்தையும் உணர்வுபூர்வமாக அனுபவிக்கும் வாய்ப்பு இதில் கலந்து கொண்ட பங்கு மக்களுக்குக் கிடைத்தது.

திருத்தொண்டர் அருமைதாஸ் அவர்களின் வழிநடத்தலுடன் இவ்விருந்தில் கலந்து கொண்ட ஒவ்வொருவரும் விடுதலைப்பயணம் நூலின் உட்கருத்துக்களை நன்றாக அறிந்தனர். விருந்தில் கொடுக்கப்பட்ட புளியாத அப்பம், முட்டை, திராட்சை ரசம், நெருப்பில் வாட்டிய ஆட்டிறைச்சி போன்ற உணவுகளை உண்ணும் போது ஏற்பட்ட உணர்வு, இயேசுவின் பலி எவ்வளவு மகத்தானது என்பதை அனைவரும் உணர்ந்தனர். மனிதன் இன்னும் இவ்வுலக மாயைகளுக்கு அடிமையாக இருக்கின்றான். இருப்பினும் இயேசுவின் பாஸ்கா பலியின் மூலம் உண்மையான விடுதலையை அடைய முடியும் என்பது வெள்ளிடைமலை. ஒவ்வொருவரும் உண்மையான விடுதலையைப் பெற வேண்டுமென்றால் இயேசுவின் பாதையில் தொடர்ந்து நடக்க வேண்டும்.



# என்னில் தொடங்கும் இறையாட்சி

இன்று நாம் புனித வாரத்தில் காலடி எடுத்து வைக்கிறோம். இயேசு கிறிஸ்து இந்த வாரத்தில் நிகழ்த்திய விடயங்களின் அடிப்படையில், இவ்வாரத்தைப் புனித வாரம் என் அழைக்கிறோம். குருத்து ஞாயிறு அன்று, மக்களின் ஆரவாரத்துடன் எருசலேத்திற்குள் அவர் நுழைகிறார். வியாழக்கிழமை இராவுணவும் கெத்சமணி தோட்டத்தில் இறைவேண்டலும் செய்கிறார். வெள்ளிக்கிழமை சித்ரவதையும் மரணமும் நிகழ்கிறது. இதனை அடுத்து, அவரது மாட்சிமிக்க உயிர்ப்பு நிகழ்கிறது. அதிமுக்கியமான நிகழ்வுகள் அனைத்தும் இந்த வாரத்தில் நடப்பதால் புனித வாரம் என அழைக்கப்படுகிறது. இது, நமது இறைநம்பிக்கைக்கு வலுவூட்டும் வாரம்.

இன்றைய நற்செய்தியாளர் புனித லூக்கா, இறையாட்சியை அறிவிக்கும் இயேசுவின் வார்த்தைகளுக்கும் செயல்களுக்கும் சிறப்புக் கவனம் செலுத்துகிறார். இராணவு நிகழ்வை விவரிப்பதில் புனித லூக்காவின் இந்த கருத்தைக் காண முடிகிறது. இராவுணவின் போது தமது சீடர்களிடம் இறையாட்சியைக் கட்டியெழுப்பும் பொறுப்பை ஒப்படைப்பார். “இது முதல் இறையாட்சி வரும்வரை திராட்சைப் பழ இரசத்தைக் குடிப்பதில்லை” (லூக்.11:18) என்றும் “மானிடமகன் தமக்கென்று குறிக்கப்பட்டபடியே போகிறார்” என்றும் கூறி சீடர்களிடம் ஒப்படைப்பார். ஆனால் மந்த புத்தியுள்ள சீடர்களால் இதனைப் புரிந்து கொள்ள முடியவில்லை. அவர்களுக்கிடையில் யார் பெரியவன் என்ற தர்க்கத்தில் சீடர்கள் ஈடுபடுகிறார்கள் (லூக்.22:24-27). இந்த வேளையில் இறையாட்சியைக் கட்டியெழுப்புவதில் தலைமைத்துவப் பண்புகளைச் சீடர்களுக்கு இயேசு அறிவுறுத்துகிறார்.

யூதாஸ் சுயநலத்தினால் இயேசுவின் மீதுள்ள விரக்தியால், காட்டிகொடுக்கும் படலத்தில் இறங்கியிருக்கலாம் (லூக்.22:21-22). பேதுரு பயத்தாலும் தமது இயலாமையாலும் இயேசுவை மறுதலித்திருக்கலாம் (லூக்.22:34). இயேசு, எருசலேசம் நுழையும் போது “போற்றப்பெறுக!” (லூக்.19:38) என மகிழ்ச்சியோடு வரவேற்ற மக்கள் “இவன் ஒழிக!” (லூக்.23:18) என கோசமிட்டனர். அதிகார ஆளுமைக்குக் கட்டுப்பட்டு மக்கள் அவ்வாறு செயல்பட்டியிருக்கலாம். சீடர்களின் (யூதாஸ்,பேதுரு) செயல்களைக் கண்டும் எருசலேம் மக்களின் போக்கு கண்டும், அன்றைய சமயத் தலைமைப்பீடத்தின் ஒருதலைபட்சமான முடிவு கண்டும் நாம் ஏமாற்றம் அடையலாம். உரோமைய ஆட்சியும் இதிலிருந்து கை கழுவிக் கொண்டியிருக்கலாம் (மத்.27:24).

ஆனால் சொல்லொன்னா வேதனையில் சிலுவையில் தொங்கும் இயேசு, “தந்தையே இவர்களை மன்னியும். ஏனெனில் தாங்கள் செய்வது என்னவென்று இவர்களுக்குத் தெரியவில்லை” (லூக்.23:34) என மன்றாடினார். சுயநலம், விரக்தி, பயம். இயலாமை, அதிகார நெருக்குதல் முதலிய காரணங்களுக்காக இன்று நாமும் இயேசுவை மறுதலிக்கிறோமா? நமது சொல்லும் செயலும் அவ்வாறு இருக்கின்றனவா? கலக்கம் வேண்டாம், நம்புங்கள், இயேசு உங்களையும் என்னையும் மன்னிக்கிறார். பேதுருவைப் போல் உண்மையாகவே வருந்துவோம், இயேசு கிறிஸ்துவே ஆண்டவர் என அறிக்கையிடும் எல்லா நாவுமே மீட்பு பெறும் என புனித பவுல் இன்றைய இரண்டாம் வாசகத்தில் (பிலி.2:11) கூறுகிறார். மீட்பு கிடைப்பது நமது செயலால் அல்ல, கடவுளின் அருளால் கிட்டுவது. ஆண்டவர் என்றும் நமக்கு துணைநிற்பார் என முதல் வாசகம் (எசா.50:7) துணிவை அளிக்கிறது. சீடர்கள் வழியாக நம்மிடம் (திருஅவை) ஒப்படைக்கப்பட்ட இறையாட்சியைக் கட்டியெழுப்புவோம். அந்த இறையாட்சி என்னில் தொடங்கட்டும். அதற்கான ஆற்றலையும் ஆக்கத்தையும் பெற இந்த புனித வாரத்தைப் பயன்படுத்திக் கொள்வோம்.

அந்தோணி இன்னாசி - சைபர்ஜெயா

## ஏப்ரல் 13
## குருத்து ஞாயிறு ஆண்டவரின் பாடுகள் ஞாயிறு

வாசகம் 1 : எசாயா 50 : 4-7

வாசகம் 1 : பிலிப்பியர் 2:6-11

நற்செய்தி : லூக்காஸ் : 22:14-23:56